

Arimaa Nokku

# அரிமா நோக்கு

18 : 2 [illegible] 2024

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE, HISTORY, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

ISSN 2320-4842

ISSN 2320-4842

# அரிமா நோக்கு

18:2 ஜூலை 2024

ஆசிரியர்
ஈரோடு தமிழன்பன்
இணையாசிரியர்
வ. ஜெயதேவன்
ஆசிரியர் குழு
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
எஸ். ஏ. சங்கரநாராயணன்
அறிவுரைக் குழு
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

பதிப்பாளர்
இரா. பன்னிருகைவடிவேலன்
259 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை, பழைய மகாபலிபுரம் சாலை, கொட்டிவாக்கம், சென்னை 600 096
arimaanokkuu@gmail.com
+91 91766 30415

## பொருளடக்கம் CONTENTS

| | | |
|---|---|---|
| புலவர் குழந்தையின் பன்முக ஆளுமை - | கோ. பழனி | 5 |
| புறநானூற்றில் விளிம்பு நிலை வாழ்வியல் | முனைவர் மு. வையாபுரி | 10 |
| நகரத்தார் வழிபாட்டில் நாயன்மார்கள் - | சி. சிதம்பரம் | 21 |
| வில்லிபாரதத்தில் இணைப்பொருட்கள் | கு. வினோத்குமார் | 26 |
| போகரும் பயண இலக்கியமும் | முனைவர் வெ. சிவசங்கர் | 31 |
| குடியேற்ற நகர தாலாட்டில் சமூகவியல் | பி. வசந்தபிரியா | 34 |
| பக்தி இலக்கியத்தில் ஆடற்கலை - | ச. விஜயலட்சுமி | 38 |
| வாதைவழிபாடுகளும் கதைப்பாடல்களும் (நாட்டுப்புறவியலின் அடிப்படையிலான கட்டுரை) | முனைவர் த. பிரகலாதன் | 44 |
| மு. பழனிசாமியின் நாவல்களில் சமூகச் சிந்தனைகள் | இரா. குமரவேல் | 49 |
| புறநானூற்றில் வெளிப்படும் சங்கப் புலவர்களின் ஆளுமை | முனைவர் இரா. அன்சல்யா | 54 |
| நற்றிணையில் நிலம் - | சு. ரம்யா | 58 |
| நவீன கவிதைப் புனைவுகளில் பெண் மொழி | முனைவர் கோ. நிர்மலாதேவி | 66 |
| வீர மரபும் அதிகாரப்படி நிலைகளும் | பொ. அகத்திய பாலா | 72 |
| அகத்திணைப்பாடல்களில் தமிழர் திருமணம் | முனைவர் தே. ராஜகுமார் | 79 |
| எட்டுத்தொகை அகப்பாடலில் யுவதிகளின் தொழில்கள் | கா. புவனேஸ்வரி | 87 |
| தொல்காப்பிய அகத்திணையியலில் காணலாகும் சமூகப்படிநிலைகள் | ரா. முத்துப்பாண்டி | 90 |
| சிலப்பதிகாரம் உணர்த்தும் கலைகள் | முனைவர் இரா. வனிதாமணி | 95 |
| கருப்பொருளும் பெண்நிலைச் சிந்தனையும் - சூழலியல் பார்வை - | முனைவர் பி. அனுராதா | 98 |
| தெருக்கூத்தில் பிரதியும் பிரதியாக்கமும் | முனைவர் சி. புவனேஸ்வரி | 106 |
| தோடரின் மக்களின் உடை (பூத்துக்குளி) | தே. வசந்தி | 110 |
| திருக்குறளில் தொழில்மேம்பாடு | முனைவர் ந. ஜெயசுதா | 116 |
| இலக்கியங்களில் பட்டாடை | பெ. தீபா | 120 |
| திருப்புகழ் உணர்த்தும் சமய ஒற்றுமை | த. பாலாஜி | 124 |
| திருவையாறு திருத்தலத்தின் சிறப்புகள் - ஓர் பார்வை | பி. வி. தனலட்சுமி | 128 |

ISSN 2320-4842

# திருக்குறளில் தொழில்மேம்பாடு

**முனைவர் ந. ஜெயசுதா**

தமிழ்த்துறைப்பேராசிரியர்,

என். ஜி. எம்.கல்லூரி,

பொள்ளாச்சி.

**ஆய்வுச்சுருக்கம்**

திருக்குறளில் பல தொழில்கள் பற்றி திருவள்ளுவர் பேசுகின்றார். சில தொழில்கள் பற்றி வெளிப்படையாகவும், இன்னும் சில தொழில்கள் பற்றி குறிப்பாலும் உணர்த்துகின்றார். உழவு, வாணிகம், அரசுப்பணிகள், கைத்தொழில், ஏவல் தொழில்கள், படைத்தொழில்கள், மருத்துவம், புலமை, சிற்பம், ஓவியம், இசைக்கருவிகள், கட்டிடத்தொழில்கள் என இன்னும் பல வகையான தொழில் குறிப்புகளைப்பற்றி எடுத்துக்காட்டியுள்ளார். இத்தொழில்களில் முக்கியமான தொழிலாகக் கருதப்படும் உழவுத்தொழில் குறித்து ஆய்வதாக அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** உழவு, வேளாண்மை, தொழில் மேம்பாடு, திருக்குறள், உழவன், கொடையாளன், பண்புடையவன்.

## முன்னுரை

உலகியல் கருத்துக்கள் பலவும் உலகப்பொதுமறையாம் திருக்குறளில் கொட்டிக் கிடக்கின்றது. திருக்குறளில் இல்லாத கருத்துக்களே கிடையாது எனலாம். வாழ்வில் வளமோடு வாழ எல்லா வளங்களும் நிறைந்திருக்க வேண்டும். உழைப்பும் மிகவும் அவசியமாகிறது. இவ்வுலகி;ல் வாழ ஒரு தொழிலைத் துவங்கி அதில் ஈடுபாடுடைய தொழிலாழியாகவும் இருக்க வேண்டும் என வள்ளுவர் கூறுகின்றார். ஒரு தொழிலைத் துவங்கி அதன்வழி பொருளாதாரத்தைப் பெருக்க முடியும். ஒவ்வொரு மனிதனும் இதனையே எண்ணிச்செயல்படுகிறான். வாழ்க்கை நடத்த பொருள் தேவைப்படுகின்றது, பொருளீட்ட ஏதேனும் ஒரு தொழிலைச் செய்ய வேண்டியிருக்கிறது. தொழிலே ஒரு நாட்டின் உயிர்த்துடிப்பாகிறது. தொழிலில்; சிறந்து விளங்கும் நாடு பொருளாதாரத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்குகிறது. தொழில் மயமாகத்தான் இவ்வுலகம் இயங்குகி;ன்றது எனலாம். உலகில் பலவகையான தொழில் முறைகள் உள்ளன. அவற்றுள் வள்ளுவர் குறிப்பிடும்; உழவுத்தொழிலை ஆய்வதாக அமைகின்றது.

## தொழில்மேம்பாடு

சங்க காலத் தமிழகத்தில் உழவத் தொழிலும், வாணிகமும் கைத்தொழில்களும் சிறந்தோங்கி இருந்தன எனலாம். தமிழகத் துறைமுகங்களில் ஏற்றுமதி இறக்குமதிகள் சிறப்புடன் நடைபெற்று வந்த செய்தியைப் பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. பொருளாதார மேம்பாட்டிற்குத் தொழில்கள் தான் மூல காரணமாக அமைந்துள்ளது. தொழிலில் வெற்றி பெற மனிதன் தன் உடல் உழைப்பையும் மனஉழைப்பையும் பயன் படுத்துகிறான்; அப்பொழுது தான் எத் தொழிலும் சிறப்பாகச் செய்ய முடியும். தனி ஒருவனின் வளர்ச்சியே சமுதாய வளர்ச்சியாகிறது. திருவள்ளுவர் தொழில் குறித்து,

**ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்**

***நீள்வினையால்நீளும்குடி***

(திருக்குறள்.1022)

பெருமுயற்சி கொண்ட உடல் உழைப் பும், நிறைந்த அறிவும் வாய்க்கப்பட்டு ள்ள இரண்டு செயல்பாடுகளால் தான் ஒரு தொழில் சிறப்பாக விளங்கும். அதனால் தான் சமுதாயம் முன்னேறும் என்கிறார். ஒருவனுக்கு உடல் வலிமை இருந்தால் மட்டும் போதாது, அறிவு என்பதும் ஒருசேர இருக்கும் போதுதான் எத்தொழிலும் சிறப்பாகச் செய்யமுடியும் என்கிறார். நுணுக்கமான வேலையை அறிவின் துணை கொண்டு தான் செய்ய முடியும். அப்பொழுதுதான் சமுதாயம் தொழிலால் மேம்பாடு அடையும். இத்தொழில் குறித்து மகாகவிபாரதி,

***உழவுக்கும் தொழிலுக்கும்; வந்தனை செய்வோம்—வீணில்***

***உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்*** (பாரதியார் கவிதைகள்)

என்ற வரிகளில் உழைப்பையும் தொழிலை யும்; முன்னிருத்தி மதிக்கின்றனர். மேலும் சங்க இலக்கியத்தில்,

***வினையே ஆடவர்க்கு உயிரே***

(குறுந்தொகை135)

என்ற வரிகளில் ஆண்களுக்கு தொழில் தான் உயிர் என்கிறது. சங்கமக்கள் குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல், பாலை என்ற ஐந்து நிலஅமைப்பின் முறையே பலதொழில்கள் செய்து வந்தனர்.

***கைத்தொழில் ஒன்றைக்கற்றுக்கொள்***
***கவலை உனக்கில்லைஒத்துக்கொள்***

(நாமக்கல் இராமலிங்கத்தின் கவிதைகள்.)

என்பதில், கைத்தொழில் கைவசம் இருந் தால் மனிதன் இவ்வுலகில் பொருளா தாரக் கவலையின்றி வாழலாம் என்பதை உணர்ந்துகொள்ளமுடிகின்றது.

மேலும் தொழில் குறித்து மேலைநாட்டி னரான ஆல்பர்ட் மார்ஷல், திருவள்ளுவ ரின் பொருளியல் சிந்தனைகள் என்னும் நூலில், *"பொருளியல் உலகில் மறுமலர் ச்சியை உண்டாக்கியவர் ஆல்பர்ட் மார்ஷல் என்ற பொருளியல்மேதை. இவர் தான் முதன்முதலாகப் பொருள் உற்பத்திக்கு நிலத்தொடு உழைப்பும் மூலதனம், நிர்வாக முயற்சி தேவை என்று குறிப்பிட்டார்."* (பக்கம் 82.ப. முருகன்) இவ்வகையில் தொழில்மேம் பாட்டைய உழைப்பு தேவை என்பதை உணர்த்துகின்றது..

**உழவுத்தொழில்**

ஆதி காலம் தொட்டு இன்று வரை தமிழர்களின் அடையாளமாக விளங்கு வது உழவுத்தொழிலே ஆகும். நதிக்கரை களையொட்டி வாழ்ந்த ஆதிமனிதனின் வாழ்வாதாரமாக விளங்கியது உழவுத் தொழில்.

கிராமங்களில் வாழும் மக்களிடம் பொது வாகவே இரக்கருணம், மற்றவர்களுக்கு உதவும் பண்பு, அமைதியாக வாழும் இயல்பினை உடையவர்களாகவே இருப் பார்கள். முன்பின் தெரியாத எவரேனும் பசி என்று வந்தால் பசியைப் போக்க உணவளித்து உபசரிக்கும் மனப்பான்மை யுடையவர்கள் உழவர்கள். இந்தியாவின் இதயம் கிராமங்களில் தான் உள்ளது என்று உழவையும், தமிழ்ப்பண்பாட்டை யும் காந்தியடிகள் கூறியுள்ளார். நம் நாட்டின் முதுகெலும்பே விவசாய மாகும். இதனை கம்பர் ஏர்எழுபதில்,

***தொழும் குலத்தில் பிறந்தால் என்ன?***
***சுடர் முடி மன்னர் ஆகி***
***எழும் குலத்தில் பிறந்தால் என்ன?***
***இவர்க்குப் பின் வணிகன் எனும்***
***செழுங்குலத்தில் பிறந்தால் என்ன?***
***சிறப்புடையர் ஆனால் என்ன***
***உழும் குலத்தில் பிறந்தாரோ***
***உலகு உய்யப் பிறந்தாரோ***

(ஏர்எழுபது. வேளாண் தொழில் பா. 9)

உலகை வாழ்விக்கப் பிறந்தவர்கள் உழவர் கள் என்கின்ற உண்மையைக் கம்பர் விளக்குகின்றார்.

உலகில் எத்தனை தொழில்கள் இருந்தா லும் உழவுத்தொழில் தான் முதன்மை என்கிறார் வள்ளுவர்.

***உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்***
***மற்றெல்லாம்***

*தொழுதுண்டு பின் செல்பவர்*

(திருக்குறள் 1033)

உலகில் உள்ள பிறருக்காகவும் உழுது தாமும் உண்டு வாழ்பவரே உழவர். மற்ற வர் எல்லாரும் பிறரைத் தொழுது அவர் பின்னே செல்பவர் ஆவார். நாட்டில் எத்தனை வளங்கள் இருந்தாலும் உணவு என்பதை உழவுத்தொழில் மட்டும் தான் தரும் என்பதை எடுத்துக்கூறுகிறது.

**சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்**
**அதனால்**
**உழந்தும் உழவே தலை** (திருக்குறள்.1031)

உலகிற்கே உணவைத்தந்து உயிரினங் களை உயிருடன் வாழ வைக்க உதவு பவர் உழவர். அதனால். உழவர்களே உலகுக்கு அச்சாணி போன்றவர் ஆகிறார்கள்.

## உழவும் சொற்பொழிவும்

வள்ளுவர் உழவரை ஒரு சொற்பொழி வாளருக்கு உவமையாக்கிக் காட்டுகிறார். இதில் உழவுத் தொழிலோடு பேச்சாற்றல் என்ற கலைத் தொழிலையும் வெளிப் படுத்துகின்றார்.

***உணர்வது உடையார் முன் சொல்லல்***
***வளர்வதன்***
***பாத்தியுள் நீர் சொரிந்து அற்று.***

(திருக்குறள். 718)

தாமே உணரவல்ல அறிவுடையார் முன் பேசுதல், தானே வளர்கின்ற பயிர் நிறைந்த பாத்தியில் நீர் ஊற்றியது போலாகாகும் என்கிறார். அதாவது, இங்கு பயிர் வளரும் வயல், நீர், உழவர் என்பவை முறையே சொற்பொழிவாற் றும் அரங்கம், அறிவுரை, சொற்பொழி வாற்றுபவர் ஆகியவற்றுக்கு ஒப்பாகக் கொள்கிறார்.

சொற்பொழிவாற்றுபவர் பொதுமக்களின் மனப்போக்குக்குத் தகுந்தாற்போல் எளி தில் புரிந்துகொண்டு மேலும் பேச்சைக் கேட்கவேண்டும் என்ற ஆர்வத்தை தூண்டும் வகையில் பேசவேண்டும், பேசுகிறார். அவ்வாறே வயலில் வளர் கின்ற பயிர்களுக்கு நீரிட்டுப் பாய்ச்சி னால் தான் பலன் கிடைக்கும். கேள்வி ஞானத்தில ஆர்வம் இல்லாதவர்களிடம் பேசுவதும், பயிர்கள் இல்லாது வெற்றிட த்தில் நீரிடுவதும் வீணாகின்றது என்ப தைப் புலப்படுத்துகின்றார்.

## உழவனும் வேந்தனும்

உழவின் முக்கியத்துவத்தை உணர்ந்த வள்ளுவப் பெருந்தகையாளர் வேந்தனு க்கு உழவரைக் கொண்டு அறிவுபுகட்டு கின்றார்.

**கொலையிற் கொடியாரை**
**வேந்தொறுத்தல் பைங்கூழ்**
**குளை கட்டதனோடு நேர்** (திருக்குறள். 550)

இதன் பொருள் கொலை போன்ற கொடியசெயலைச் செய்பவரை அரசாள் பவன் தண்டிப்பது போல, பயிர்களுக்கு நடுவே வளர்ந்துள்ள களைகளை நீக்குவ தற்குச் சமம் என்பதாம். இதில் நாட்டை யாளும் மன்னன், நாட்டில் உள்ள மக்களிடம் கொலை, கொள்ளை போன்ற இன்னும் பல குற்றங்களையெல்லாம் செய்து தீங்கு செய்யும் கொடியவனை இனங்கண்டு அவர்களை அழிப்பது மன்னனின் கடமையாகிறது.

விளைச்சல் வயல்களில் விளையும் பயிருடன் விதைக்காமலே வளர்பவை களைச் செடிகள் ஆகும். இக்களைச் செடிகளின் வேர்கள் ஆழமாகச்சென்று பயிர்க ளுக்கு இட்ட உரங்களை பெருமளவு எடுத்துக் கொள்கின்றன. அதனால் பயிர் களுக்குரிய சத்துக்கள் முழுவதும் கிடைக் காது போகும். ஆகவே உழவர்கள் வயலில் களைச் செடி களை வளரவிடாமல் களையெடுத்து பயிர்களைப்பாதுகாத்து உலகமக்கள் வாழ்வதற்கான உணவினை விளைவித் துத் தருகின்றனர். இதில், மக்களின் வாழ்வாதார உணவிற்கான களையை உழவன் எடுப்பது போல, மக்களின் நல்வாழ்விற்கான குற்றங்களை களையெ டுப்பது மன்னனின் கடமையாகிறது என உழவுத்தொழிலைக் கொண்டு மன்ன னின் கடமையான தொழிலை விளக்க முற்படுகின்றார் வள்ளுவர். நாடானாலும் காடானாலும் களையெடுப்பது என்பது

அவசியமாகின்றது.

**கொடையாளன்**

உழவுத்தொழில் செய்யும் உழவர்கள் மற்றவர்களுக்கு உதவும் குணம் கொண்டவர்கள், யாரிடமும் இரவாத குணமுடையவர்கள் என்பதை வள்ளுவர்,

***இரவார் இரப்பார்க்கு ஒன்று ஈவர் கரவாது***
***கைசெய்தூண் மாலை யவர்***

(திருக்குறள். 1035)

தம் கையினால் உழுது உண்ணும் உழவர், பிறரிடம் பிச்சை எடுக்கமாட்டார். பிச்சையென வருவார்க்கு இல்லை எனச் சொல்லாமல் கொடுக்கும் குணமுடையவர் என்கிறார். பொதுவாகவே உழவன் ஊருக்கே படியளக்கும் பண்புடையவன். பொதுநலத்துடன் உழைப்பையே நம்பி வாழ்பவர்கள். உழைக்கும் கரங்கள் தான் உதவும் கரங்களாகின்றன.

புறநானூற்றில் வேளாண் என்னும் சொல்லுக்கு உதவுதல் என்னும் பொருள் படுகின்றது.

***கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்*** (புறநானூறு. 74.4) இந்நூல் போல் சங்க இலக்கிய நூல்கள் பலவற்றிலும் வேளாண்மை என்னும் சொல்லுக்கு உதவுதல் விருந்தோம்புதல் என்ற பொருள்களில் பயின்றுவருகின்றது. உழவர்கள் பிறருக்கு உதவும் குணம் கொண்டவர்கள். இத்தகைய சிறப்பான உழவனை ஔவையார் பெருமைப்படுத்துகின்றார்.

***"ஆற்றங்கரையின் மரமும் அரசறிய***
***வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே - ஏற்றம்***
***உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்***
***பழுதுண்டு ஓர் பணிக்கு*** (நல்வழி.12)

ஆற்றங்கரையில் வளர்ந்திருக்கும் மிகப் பெரிய மரமானது பெருவெள்ளம் வரும் போது சாய்ந்துவிடும். அவ்வாறே பெரிய அரசசேவையில் உள்ளவரும் குறிப்பிட்ட காலம் ஓய்வு பெறுவது கட்டாயமாகும். ஆனால் உழவுத் தொழில் செய்து வரும் உழவனுக்கு மட்டும் ஓய்வு என்பது கிடையாது. நேரம் பார்க்காமல் வேலை செய்யக் கூடியவர்கள். ஆகவே உழவுத்தொழிலுக்கு நிகரான தொழிலே இவ்வுலகில் கிடையாது எனலாம்.

**முடிவுரை**

இன்றைய நவீன உலகத்தில் உழவுத் தொழில் குறைந்து வருகின்றது. இதற்குக் காரணம், வெயிலில் நின்று வேலை செய்வதோடு கஷ்டப்பட்டு உழகை;க வேண்டியுள்ளது. படித்தவர்கள் எவரும் வயல்களில் இறங்கி வேலை செய்யத் தயாராக இல்லை. இதனால் ஒவ்வொரு நாடும் தனது உணவுத்தேவையை நிறைவேற்ற நம் நாடுகளில் ஏற்றுமதி செய்கின்றனர். வருங்காலத்தில் தமிழகத்திலும் இந்நிலைதான் ஏற்படும். ஆதனால் உழவைப்போற்றிப் பாதுகாப்போம்.

**துணைநூற்பட்டியல்**


1. ஏர் எழுபது, https://www.project madurai.org/pm_etexts/utf8/pmuni015 4.html
2. குறுந்தொகை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் அம்பத்தூர்,சென்னை.600 098.
3.திருக்குறள்-கு.மோகனாராசு, மணிவாச கர் பதிப்பகம், சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 108, 23ஆவது பதிப்பு, மார்ச் 2022.
4. திருவள்ளுவரின் பொருளியல் சிந்தனை கள் - ப.முருகன், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை.600 098.
5. நல்வழி, https://www.chennai library.com/avvai/nalvazhi.html
6. நாமக்கல் இராமலிங்கத்தின் கவிதை கள். https://www.tamilvu.org/ta/courses-degree-p103-p1031-html-p1031151-25547#113
7. பாரதியார் கவிதைகள் பாப்புலர், பப்ளிகேசன்ஸ், 64 இளங்கோ தெரு, அசோக் நகர், சென்னை-83, முதற்பதிப்பு ஜீலை-2002.


Acknowledgement: would like to thank the Management of Nallamuthu Gounder Mahalingam College, Pollachi for financial assistance through SEED money support.